1979 அக்டோபர் 31]

சேயூரிலிருந்து மொண்டிபாளையம் 7 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சேயூரில் கால்நடை மருந்தகம் துவக்கப் பட்டால், அது மொண்டிபாளையத்தில் உள்ள கால்நடைகளின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யும்.

எனவே, மொண்டிபாளைத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

சென்னை மாநகராட்சிப் பணிகளுக்கு காவல் துறையின் தனிப் பிரிவு

*வினா எண். 60-அ— திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி நிர்வாகப் பணிகளுக்கு துணை யாக தனி துணைக் காவல் நிலையம் வேண்டுமென்று மாநகராட்சி நிர்வாகம் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு அந்த கோரிக்கை அரசுக்கு வந்தது?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்) : (அ) & (ஆ) சென்னை மாநகரத்தைச் சுத்தமாக வைத்திருப் பதற்கும், சட்டதிட்டங்களை திறம்பட அமல் படுத்துவதற்கும், மாநகராட்சிக்கு உதவியாக ஒரு காவல் துறை உதவி ஆணை யாளர், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், எட்டு காவலர் களையும் கொண்ட ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்துமாறு சென்னை மாநகராட்சித் தனி அதிகாரி அரசுக்கு 27-12-1975 நாளிட்ட கடிதத்திலே ஒரு கோரிக்கை அனுப்பியிருந்தார். சென்னை மாநகரத்தில் நடக்கும் நகர் நலக் குற்றங்களை (Civic offences) தடுக்கும் பொருட்டு 1976 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இரண்டு நடமாடும் நீதி மன்றங்களுக்கு உதவியாக இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக் காவலர், எட்டு காவலர்-தரம் 1 ஆகியோரை அரசு நியமித்து விட்டதால் மாநகராட்சி தனி அதிகாரி அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன் ; செயலர் சொன்ன விவரங்கள் எனக்குப் புரியவில்லை. மீண்டும் சொல்ல வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும், சட்டதிட்டங்களைத் திறம்பட அமல்படுத்துவதற்கும், மாநகராட்சிக்கு உதவியாக ஒரு காவல் துறை உதவி ஆணையாளர், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள்,

எட்டு காவலர்களையும் கொண்ட ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்துமாறு சென்னை மாநகராட்சித் தனி அதிகாரி அரசுக்கு 27-12-1975 நாளிட்ட கடிதத்தில் ஒரு கோரிக்கை அனுப்பியிருந்தார். சென்னை மாநரத்தில் நடக்கும் நகர் நல குற்றங்களைத் தடுக்கும் பொருட்டு 1976-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இரண்டு நடமாடும் நீதி மன்றங்களுக்கு உதவியாக இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக் காவலர், எட்டு காவலர்-தரம் 1 ஆகியோரை அரசு நியமித்துவிட்டதால்' மாநகராட்சித் தனி அதிகாரி அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: 1975 ஆம் ஆண்டு அரசுக்கு மாநகராட்சி மூலமாக இந்தக் கோரிக்கை வந்தது என்று தெரிவித்தார்கள். நான் மாநகராட்சியின் சுகாதார குழுத் தலைவராக இருந்தபோது இந்தக் கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டது. இப்போது சிறப்பு அலுவலர் அதை வலியுறுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். இதை உடனடியாகச் செயல் படுத்த அரசு முன்வருமா? இதை அமைக்காத காரணத்தால் என்க்ரோச்மென்ட் போன்றவை ஏறபடும்போது நடவடிக்கை எடுக்க காவலர்கள் வரமுடியாத நிலைமை ஏற்படுகிறது. நேற்றையதினம் கூட நகராட்சி நடைபாதையில் கட்டடம் கட்டி அமைச்சர் வந்து திறந்து வைத்திருக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். வேறு எங்கோ போகிறீர்களே. கேள்வி கேட்கிற திறமை வேண்டாமா? இதிலே போய் ஒரு குற்றச்சாட்டா?

[முற்பகல் 10-00]

திரு. சென்னை மு. அரங்கநாதன்: ஏன், குற்றச்சாட்டு சொன்னால் அலறுகிறீர்கள் நீங்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளைப் படியுங்கள்:

திரு. சென்னை மு. அரங்கநாதன்: இது குற்றச்சாட்டு அல்ல. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருக்க உடனடியாக காவல் நிலையம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்). சென்னை மாநகரத்தில் நடக்கும் நகர் நல குற்றங்களை தடுப்பதற்காக இரண்டு நடமாடும் நீதி மன்றங்களை ஏற்படுத்த அரசு ஆணை நிலை எண். 2228, உள் துறை, நாள் 7-9-1976ல் உத்தரவிட்டது. இந்த இரு நடமாடும் நீதி மன்றங்களுக்கு உதவியாக இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக்

1979 அக்டோபர் 31]

காவலர், எட்டு காவலர்–தரம் 1 ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஆதலால், சென்னை மாநகராட்சி தனி அலுவலர் அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை,

அரசு ஆணை நிலை எண் 2228, உள் துறை, நாள் 7–9–1976ல் ஏற்படுத்தப்பட்ட இரண்டு நடமாடும் நீதி மன்றங்கள் தற்போது நடமாடும் நீதிமன்றங்களாக செயல்படாமல் XIX, XX மெட்ரோ பாலிடன் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களாகச் செயல்படுகின்றன. 19–11–1977 முதல் இவை காலை நேரங்களில் அந்தந்த டிவிஷனில் உள்ள வட்ட அலுவலகம் ஏதாவது ஒன்றில் செயல்படுகின்றன. மாலை நேரங்களில் இவை கண்ணப்பர் திடல், மற்றும் நுங்கம்பாக்கத்தில் உள்ள வட்ட அலுவலகங்களில் செயல்படு கின்றன. இந்த இரண்டு நீதிமன்றங்களுக்கு உதவியாகநியமிக்கப் பட்டகாவல் துறை அலுவலர்களின் பதவிகள் 29-2–1980 முடிய நீட்டிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு பதில் என்னவென்றால், நகர் நலக்குற்றங்களைத் தடுப்பதற்கு நியமிக்கப்படும் காவல் துறை அலுவலர்களுக்கான முழுச்செலவையும் சென்னை மாநகராட்சி ஏற்றுக்கொள்ள சம்மதிக்கிறதா, என காவல்துறை யினரால் கேட்கப்பட்டது. இதற்கிடையில், நகர்நலக் குற்றங் களைத் தடுக்க இரண்டு நீதிமன்றங்களை ஏற்படுத்திவிட்டதால் சென்னை மாநகராட்சி தனி அலுவலர் அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

காவல் துறையில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறை

* வினா எண். 60-ஆ—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போக்குவரத்துப் போலீசாருக்கு என ஒரு கட்டுப் பாட்டு அறை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

<u>திரு. சு. ம. துரைராஜ்</u> (அமைச்சரின் பேரவை செயலர்);

(அ) & (ஆ) தற்போது ஒரு போக்குவரத்து கட்டுப்பாட்டு அறை இயங்கி வருகிறது. இதற்குத் தனியாக ஒரு வானொலி வழி அமைக்கப்பட்டுள்ளது. இத்தனி வழியாக போக்குவரத்து சம்பந்தப்பட்ட அறிவுரைகளைப் பொது மக்களுக்கு எடுத்துக் கூறவும், நெரிசல்களைப் தவிர்க்கவும், குறிப்பாக முக்கிய பிரமுகர்கள் வருகை தரும்போதும் மற்றும் ஊர்வலங்கள் வரும் போதும் போக்குவரத்தை ஒழுங்கு செய்ய மிகவும் பயன்படு கிறது. பொதுமக்கள் சாலை விபத்து, மற்றும் போக்குவரத்து சம்பந்தப்பட்ட பல விஷயங்களில் நேரடித் தொடர்பு கொள்ள தனித் தொலைபேசிகள் இந்த கட்டுப்பாட்டு அறையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த தனித் தொலைபேசிகள் பற்றிய விவரங்கள் திரை அரங்கு விளம்பர கண்ணாடி மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.